**கவனிக்க.-** *31.01.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III), *பகுதி* II, *பகுதி* III *மற்றும் பகுதி* IV(*அ*) *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1849 - 2014 පෙබරවාරි මස 07 වැනි සිකුරාදා - 2014.02.07

*1849 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(*ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.*)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 166 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 173 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, பெப்புருவரி 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கொஸ்தாபல் மற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவிகள் (விசேட அதிரடிப்படை)

*2014.01.03 ஆந் திகதிய 1844 ஆம் இலக்க வர்த்தமானி பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள் பகுதியில், பதவிகள்-வெற்றிடம் தலைப்பில் பக்கம் 3 தொடக்கம் 10 வரை வெளியிட்ட அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதி 2014.03.01 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*பொலிஸ் மா அதிபர்.*

*பொலிஸ் தலைமையகம்,*
*கொழும்பு 01,*
*2014, சனவரி 22.*

*2-191*

---

இரத்துச் செய்தல்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

*கண்டி மாவட்டம்*

*2013.10.04 ஆந் திகதிய 1831 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய விண்ணப்பம் கோரல் அறிவித்தலினை இரத்துச்செய்வதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*ஈ. எம். குணசேகர,*
*பதிவாளர் நாயகம்.*

*பதிவாளர் நாயகம் திணைக்களம்,*
*இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை.*

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* |
|---|---|---|
| *கண்டி* | *யட்டிநுவர* | *கண்டி மாவட்டத்தின் யட்டிநுவர மெதபலாத்த பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் உடபலாத்த பிரிவில் விவாகப் பதிவாளர் (கண்டிய/பொது) பதவி* |
| *கண்டி* | *யட்டிநுவர* | *யட்டிநுவர மெதபலாத்த பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் (கண்டிய/பொது) பதவி* |

*2-178*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, பங்குனி மாதம் 07 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, தை 20.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | நாரம்மல | நாரம்மல பகுதியில் தம்பதெனி ஹத்பத்துவ பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், குருநாகல் |

2-128

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிக்கப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அல்- ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும் நல்ல ஒழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும், சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்புமுடையவராகவும், விவாகமான ஒருவருமாக இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணபதாரர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற காலஎல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 6,000 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காகவும் மாதாந்தம் ரூபா 5,000 கொடுப்பனவாக வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, விண்ணப்பங்கள் 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 6 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத்தபாலில்

அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''காதி'' எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

சிசிர ரத்னாயக்க,
செயலாளர்,
நீதிச் சேவை ஆணைக்குழு.

நீதிச் சேவை ஆணைக்குழு செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2014, சனவரி 21.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | நிந்தவூர் | அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 2. | மொனராகலை | மொனராகலை மாவட்டத்தின் மொனராகலை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 3. | அம்பாந் தோட்டை | அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந் நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 4. | ஏறாவூர் | மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 5. | பொலன் னறுவை | பொலன்னறுவை மாவட்டத்தின் பொலன் னறுவை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 6. | கொழும்பு வடக்கு | கொழும்பு நீதிப் பிரிவுக்குட்பட்ட கோட்டை, புறக்கோட்டை, மருதானை, சுதுவெல்லை, பொரல்லை, குப்பியாவத்தை, தெமட்டகொடை, மாளிகாகந்த, மாதம்பிட்டிய, மோதரை, மட்டக்குளி, கொட்டா வீதி, கொலொன்னாவை, அங்கொடை, வெல்லம்பிட்டிய பிரதேசங்களுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 7. | கொழும்பு மேற்கு | கொழும்பு நீதிப் பிரிவுக்குட்பட்ட தெகிவளை, கல்கிஸ்ஸை, இரத்மலானை, நுகேகொடை, பெப்பிலியான, மஹரகமை, பன்னிபிட்டிய, ஹோமாகம, பொல்கஸ்ஓவிட்ட, இங்கிரிய, ராஜகிரிய, பத்தரமுல்லை, அத்துருகிரிய பிரதேசங்களுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 8. | அட்டாளைச் சேனை | அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 9. | நாவலப்பிட்டிய | கண்டி மாவட்டத்தின் உடபுலத்கமை இறைவரிப் பிரிவு மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் ஹப்புகஸ்தலாவை பிரதேசங்களுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக ரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 10. | புத்தளம், சிலாபம் | புத்தளம் மாவட்டத்தின் புத்தளம், சிலாபம் நீதிப்பிரிவுக்கான (கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவு தவிர்ந்த) காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 11. | மூதூர் (கொடியார் பற்று) | திருகோணமலை மாவட்ட கொடியார்பற்று இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 12. | அக்குறணை | கண்டி மாவட்டத்தின் அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 13. | கொழும்பு தெற்கு | கொழும்பு நீதிப்பிரிவுக்குட்பட்ட கொம்பனித் தெரு, கறுவாத்தோட்டம், கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, ஹெவ்லொக் டவுன், நாரஹேன் பிட்டி, வெள்ளவத்தை, கிருலப்பனை பிரதேசங்களுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |

மாதிரி விண்ணப்பப்படிவம்

*1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்ட முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் .................................... பிரதேசத்திற்கான காதிப் பதவி*

1. முழுப்பெயர் :

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :

3. நிலையான வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி :

6. வயது :

7. தேசிய இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :

12. தொழில் தகைமைகள் :

13. விண்ணப்பதாரி எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

15. விவாகமானவரா ? :

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா ? :

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| முதல் | வரை | தொழில் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூ.

19. மாதாந்த வருமானம் : ரூ.

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூ.

21. சென்ற பத்து வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? :

22. நீர் வருமானவரி செலுத்துமொருவரா ? :

23. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதேனும் உண்டா ? இருந்ததா ? :

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் :

25. உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள, உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| (1) | (2) |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி : | உம்மையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

2-177

---

### சுகாதார அமைச்சு

துணை மருத்துவ சேவை வகையின் பிரிவு - 02 (எம்ரீ 05 - 2006 (ஏ) (Speech Therapist) பேச்சுச் சிகிச்சையாளர் தரம் III பதவிக்கு போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

சுகாதார அமைச்சின்கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளுக்கு பேச்சு சிகிச்சையாளர் (Speech Therapist) பதவியின் தரம் III இல் தற்போதுள்ள வெற்றிடம் காரணமாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து அமைச்சு செயலாளரினால் அல்லது அமைச்சு செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள், அவர்களது உடற்றகுதி மற்றும் தகைமைகள் ஒரு நேர்முகப் பரீட்சையினூடாக பரீட்சிக்கப்பட்ட பின்னர் இப்பதவிக்காக நியமிக்கப்படுவார்கள். (சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையிலும், அமைச்சின் தேவைப்பாடுகளின் அடிப்படையிலும் சுகாதார அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.)

2. **வேண்டப்படும் தகைமைகள் :**

(i) *கல்வித் தகைமைகள்*.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்

திலிருந்து பெறப்பட்ட பேச்சுச் சிகிச்சை (Speech Therapist) தொடர்பில் 02 வருடத்திற்கு குறையாத முழுநேர டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல் ;

(ii) அனுபவம்.- ஏற்புடையதன்று ;

(iii) உடற்றகுதி.- இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் ரீதியான, உள ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் ;

(iv) ஏனையவை :

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரி நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பம் கோரப்படும் முடிவுத் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக வேண்டப்பட்ட அனைத்து தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **தொழில் நியதிகளும், சேவை நிபந்தனைகளும்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு வேதனத்தின் குறிப்பிட்ட சதவீதத்தை பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) இப்பதவி 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலைக்கு உட்படுத்தப்படும்.

(iii) 07/2007 ஆம் இலக்க பொ. நி. சுற்றறிக்கைக்கு அமைவாகவும், அதற்கு பிரதியீடான சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் பதவியில் சேர்க்கப்பட்டு 5 வருட காலத்தினுள் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் பதவியுடன் தொடர்புடையதாக குறித்த தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும்.

(iv) பதவியில் இணைத்துக்கொள்ளப்பட்டு 3 வருடத்தினுள் முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(v) இந்த நியமனம் அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவை விதிகள், நிதிப்பிரமாணம் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் என்பவற்றினால் கையாளப்படும்.

4. **வயது**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு ரூபா 15,260 - 6 x 180 - 4 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 28,020.

6. **எழுத்துப் பரீட்சை பின்வரும் விடயங்களின் பிரகாரம் நடத்தப்படும்** :-

| | வினாத்தாள் | பாடத்திட்டம் | பெறக் கூடிய புள்ளிகள் | பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. | நுண்ணறிவுப் பரீட்சை | சொற்கள், இலக்கங்கள் மற்றும் படங்களில் காட்டப்பட்டுள்ள சிக்கல்களுக்கு பரீட்சார்த்திகளினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பதில்களினூடாக அப்பிரச்சினைகள் தொடர்பில் புரிந்துணர்வு, பெருமளவிலான எண்ணிக்கைகளை கணிப்பீடு செய்தல் மற்றும் நேரத்துக்கும், அவகாசத்திற்கு மிடையிலான கூட்டுத் தொடர்பினை புரிந்து கொள்ளுதல் தொடர்பில் பரீட்சார்த்தியின் ஆற்றல் பரீட்சிக்கப்படும். | 100 | 40% |
| 2. | பொது அறிவு | பேச்சு சிகிச்சையாளர் (Speech Therapist) பதவிக்குரியதாக தர்க்க ரீதியான விளக்கங்கள் மற்றும் பொது அறிவு என்பன இவ்வினாத் தாளின் ஊடாக பரீட்சிக்கப்படும். | 100 | 40% |

7. **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- இப்பதவிக்காக வேண்டப்பட்ட சகல தகைமைகளையும் பூர்த்திசெய்து விண்ணப்பங்கள் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

எழுத்து பரீட்சையின்போது ஒவ்வொருவரும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு பின்வரும் அடையாள ஆவணம் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. (அ) விண்ணப்பங்கள் 2014.03.14 ஆந் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
(பணிப்பாளர் (நிர்வாகம்) பிரிவு 06),
சுகாதார அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் ஒன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தினை ஏ4 அளவுத் தாளில் முன்பக்கத்தில் இலக்கம் 1 இலிருந்து 7 வரையான விடயங்களையும் 2 ஆவது பக்கத்தில் இலக்கம் 8-11 இற்குரிய விடயங்களும் ஏனைய விடயங்களும் உள்ளடக்கக்கூடியதாக தயாரிக்கப்பட்டு தமது சொந்தக் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், ''பேச்சுச் சிகிச்சையாளர் (Speech Therapist) பதவிக்கான விண்ணப்பப்படிவம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாணம் எடுத்த ஆணையாளர் ஒருவர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/ஆயுதப் படைகளின் கட்டளையிடும் அதிகாரி/பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவி ஒன்றினைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர பதவியினைக் கொண்டுள்ளவரும் வருடாந்தம் 2,73,060 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்தினைப் பெறுபவருமான ஒருவரால் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா பிரதான அஞ்சல் அலுவலகம், கொழும்பு 10 இற்கு செலுத்தப் படக்கூடியவாறாக ''செயலாளர், சுகாதார அமைச்சு', 'சுவசிறிபாய', இல. 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10'' என்னும் முகவரிக்கு காசுக் கட்டளையாக செலுத்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

(ஊ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர் தமது விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் நிறுவனங்களின் நிறுவனத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(எ) இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பான எவ்விதமான முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்**.- உங்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏதேனும் பிழையானது அல்லது தவறானது என பரீட்சைக்கு முன்னதாக கண்டுபிடிக்கப்படுமிடத்து உங்களது பரீட்சைத் தகைமையானது இழக்கப்படவேண்டி நேரிடும். நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து அதற்கான செயல் நடவடிக்கைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

* இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன், இவற்றுள் ஏதாவது முரண்பாடுகள் காணப்படுமிடத்து சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலே சரியானது என கொள்ளப்பட வேண்டும்.

* இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் சுகாதார செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

டாக்டர் வை. டி. நிஹால் ஜயதிலக்க,
செயலாளர்.

சுகாதார அமைச்சு,
கொழும்பு 10,
2014, சனவரி 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சின் பேச்சுச் சிகிச்சையாளர் (Speech Therapist) III தரம் பதவிக்கு போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்**

வசிக்கும் மாவட்டம் : [ ] மொழி மூலம் : (சிங்களம்-01/தமிழ்-02/ஆங்கிலம்-03) [ ]
(பெட்டிக்குள் உரிய இலக்கத்தை இடுக.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) : Mr./Mrs/Miss :----.
உதாரணம் : Mr./~~Mrs/Miss~~ (SILVA A.B.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 முகவரி- தனிப்பட்டது (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.2 முகவரி- தனிப்பட்டது (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 முகவரி- அலுவலகம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.4 முகவரி- அலுவலகம் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/கூட்டுத் தாபனம் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர் அவர் பணியாற்றும் நிறுவனத்தின் முகவரியை அலுவலக முகவரியாக குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் அது உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
5. தொலைபேசி இலக்கம் :----.
6. பால் (ஆண்/பெண்) :----.
7. தகைமைகள் (வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2 இன்கீழ் உள்ள தகைமைகள்) :

* கல்வித் தகைமைகள்/தொழில்சார் தகைமைகள் :--------
-----------------------------------------------
-----------------------------------------------
-----------------------------------------------

* அனுபவம் :----------------------------------------
-----------------------------------------------
-----------------------------------------------
-----------------------------------------------

8. பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு பற்றி விபரம் :
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

| பற்றுச்சீட்டை இங்கே கழறாதவாறு ஒட்டவும்.<br>ரூபா 500 |
|---|

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.**- இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும், சரியானதும் என கௌரவமாக வெளிப்படுத்துகின்றேன். இதில் உள்ள ஏதேனும் விபரங்கள் பிழையானது அல்லது தவறானது என தெரிவுசெய்வதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பம் இரத்தாக்கப்படும் என்றும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.- இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................. என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும், அவர் தனது கையொப்பத்தினை ......................... ஆந் திகதி என் முன்னிலையில் வைத்துள்ளார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

11. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
(அமைச்சு, மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவர்களுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ........................ இந்த திணைக்களத்தில்/மாகாண சபையில்/நிறுவனத்தில் .................... ஆந் திகதியிலிருந்து பணியாற்றுகின்றார். அவர் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான/தற்காலிகமானதுமான பதவியினை வகிக்கின்றார். அவர் கடந்த ......................... வருட காலப்பகுதியினுள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும் அவர் ஒழுக்காற்று தண்டனைகள் (எச்சரிக்கை தவிர) எவற்றுக்கும் ஆளாகவில்லை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் இவ் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளில் இருந்து பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும் அதன்படி அவ்விபரங்கள் சரியானவை என்றும், அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் ........................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திகதி :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(உத்தியோகபூர்வ இலச்சினை இடப்பட வேண்டும்.)

2-180

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

### கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல சேவைகள் எழுதுனர்கள் சேவையில் III ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்குரிய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள கமநல சேவைகள் நிலைய எழுதுனர்கள் பதவியின் பொருட்டு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 1 தொடக்கம் 7 வரையில் முதலாம் பக்கத்திற்கும் 8 தொடக்கம் 12 வரையில் இரண்டாவது பக்கத்திற்கும் மிகுதியை மூன்றாவது பக்கத்திற்கும் உள்ளடக்கும் வகையில் தயாரித்து, விண்ணப்பதாரி தனது சொந்தக் கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும். மாதிரிப்படிவத்திற்கமையாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். (இவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.)

விண்ணப்பப்படிவங்கள் 2014.03.07 ஆந்திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் மட்டும் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல சேவைகள் நிலைய எழுதுனர்கள் சேவையில் III ஆம் வகுப்பிற்கு உத்தியோகத் தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதில் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் அத்தியாவசியமாகும். அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் அவர்களது திணைக்களத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், தாமதமாகிக் கிடைக்கப்பெறும் மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சார்த்திகள் தான் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமாக அமையும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான நகரங்களில் பரீட்சை நடாத்தப்படும் :-

**அட்டவணை - 1**

| நகரம் | நகரம் எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | மட்டக்களப்பு | 15 |
| கம்பஹா | 02 | அம்பாறை | 16 |
| களுத்துறை | 03 | திருகோணமலை | 17 |
| கண்டி | 04 | குருநாகலை | 18 |
| மாத்தளை | 05 | புத்தளம் | 19 |
| நுவரஎலிய | 06 | அனுராதபுரம் | 20 |
| காலி | 07 | பொலன்னறுவை | 21 |
| மாத்தறை | 08 | பதுளை | 22 |
| அம்பாந்தோட்டை | 09 | மொனறாகலை | 23 |
| யாழ்ப்பாணம் | 10 | இரத்தினபுரி | 24 |
| மன்னார் | 11 | கேகாலை | 25 |
| வவுனியா | 12 | | |
| முல்லைத்தீவு | 13 | | |
| கிளிநொச்சி | 14 | | |

விண்ணப்பப்படிவத்தில் குறித்த கூட்டினுள் நகர மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிடப்படல் வேண்டும். ஏதாவது ஒரு நிலையத்தில் போதுமான அளவில் பரீட்சைக்காக பரீட்சார்த்திகள் விண்ணப்பித் திருக்காவிடின், அவர்களின் இரண்டாவது விருப்பத்திற்கமைய விண்ணப்பித்துள்ள நகரத்திற்கு அண்மித்துள்ள வேறு நகரமொன்று அவர்களுக்கு வழங்கப்படும். பரீட்சையின் பொருட்டு விண்ணப் பித்துள்ள நகரத்தை/ நகரங்களை பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

**2. சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் :**

2.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்தானது. விதவைகள் அநாதைகள் / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

2.2 பொதுச் சேவையின் நியமனம் தொடர்பான தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகளும் செயற்பாட்டு நடைமுறை ஏற்பாடுகளும் ஏற்புடையதாகும்.

2.3 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப்பிரமாணத்திற்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், காலத்திற்கு காலம் அரசினால் விடுக்கப்படும் ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கும் பணிதல் வேண்டும்.

**3. பொதுவான தகைமைகள் :**

3.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

3.2 சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;

3.3 சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற விரும்புதல் வேண்டும் என்பதுடன் முதல் நியமன நிலையத்தில் கட்டாயமாக 5 வருட சேவைக்காலத்தினை நிறைவுசெய்தல் வேண்டும் ;

3.4 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரர்களின் வயது 18 இற்குக் குறையாமலும் 30 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று.

**4. கல்வித் தகைமைகள்.**- சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஏதாவதொரு மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

மற்றும்

ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலாவது (பொது பரீட்சை தவிர்ந்த) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**5. தெரிவுசெய்யும் முறை :**

5.1 எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் நிபந்தனைகள்.- எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாவிற்கும் 40% புள்ளிகள் வீதம் அல்லது அதைவிடக் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்து, அவர்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறும்.

விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மற்றும் திறமை தொடர்பான தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேறு பட்டியலொன்று சகல விண்ணப்ப தாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளரினால் வழங்கப் படும்.

5.2 எழுத்துப் பரீட்சைக்குரிய பாடவிதானம்.- பரீட்சை இரு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும் :

(1) கணக்கீடு- (காலம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.

(2) புரிந்துணர்வுப் பரீட்சை.- (காலம் : 2 மணித்தி யாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.
(சித்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடத்திற்கும், மொத்தப் புள்ளிகளில் 40% புள்ளிகள் பரீட்சார்த்தி களினால் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.)

பாட விதானம் :

(1) கணக்கீட்டுப் பரீட்சை.- இவ்வினாப்பத்திரம் கணக்கு வைத்தல் தொடர்பான அடிப்படைக் கோட்பாடு மற்றும் பரீட்சை மீதியை ஆதாரமாகக் கொண்டு விற்பனை, இலாப நட்டக் கணக்கு மற்றும் ஐந்தொகைப் பத்திரத்தை தயாரித்தல் போன்ற விடயம் தொடர்பான வினாக்களைக் கொண்டதாகும்.

(2) புரிந்துணர்வுப் பரீட்சை.- பதிவேடுகள் தொடர்பான கற்றல், விடயங்களைப் புரிந்து கொள்ளல் மற்றும் அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றல் என்பனவற்றை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்படும் வினாப்பத்திரமாகும்.

5.3 பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகள் மூலமும் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் மாற்றப்படுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் பரீட்சையின்போது தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும்.

5.4 பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வழங்குவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

6. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்).**- பொது நிர்வாக சுற்றுநிருபம் 6/2006 (IV) இல் எம்என்-1-2006ஏ இன்கீழ் ரூபா 13,120-10 x 145-11 x 170-10 x 240-10 x 320 - 22,040.

7. **பதவி உயர்வு நடைமுறைவிதிகள்.**- கமநல சேவைகள் நிலைய ஆட்சேர்ப்பு நடைமுறை விதி உரித்துடையதாகும்.

8. **பரீட்சைக் கட்டணம்.**- விண்ணப்பதாரரினால் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டிய ரூபா 500 பணத்தை அண்மையில் உள்ள கமநல சேவைகள் நிலையத்திற்கு கையளித்தல் வேண்டும் என்பதுடன், கமநல சேவைகள் நிலையத்தின் மூலம் பணத்தைப் பெற்றுக்கொண்டதற்கான க. சே. நி./ 2(அ) என்னும் பற்றுச்சீட்டு வழங்கப்படும். இப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பின் தேவையின் பொருட்டு பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருத்தல் சாலச்சிறந்ததாகும். எக்காரணம் கொண்டும் இப்பணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

9. **அரச மொழிக் கொள்கையை செயற்படுத்தல்.**- 28.04.2007 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 07/2007 இற்கமைய 01.07.2007 ஆந் திகதியின் பின்னர் சேவைக்காக சேர்த்துக்கொள்ளப்படும் அரச உத்தியோகத்தர்கள், சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியை அரச சேவைக்குச் சேர்ந்து 5 வருட காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்.**- விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றில் அதிபரொருவர் அல்லது சமாதான நீதவானொருவரினால் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளரொருவரினால் அல்லது சட்டத்தரணியொருவரினால் அல்லது முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலரொருவரினால் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அதிகாரியொருவர் அல்லது அரசாங்க சேவையின் நிரந்தர பதவிநிலைத் தரத்திலுள்ள அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

11. விண்ணப்பதாரர்களின் பொருட்டு அனுமதி அட்டை வழங்கப்பட்டதுடன், அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்தும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், அதில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு, அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்குரிய பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்பிரதி, பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட பற்றுச்சீட்டையும், தங்களது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியையும் பரீட்சையின் பெயரையும் சரியாகக் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி கேட்டறிதல் வேண்டும். தாங்கள் கொழும்பிலிருந்து வெளிப்பிரதேசத்திலுள்ள விண்ணப்பதாரியொருவர் எனின் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்பிவைக்கும் பொருட்டு தொலைநகல் இலக்கமொன்றையும் மேற்கூறப்பட்டுள்ள விபரங்களைக் கொண்ட தங்களின் வேண்டுகோள் கடிதமொன்றை தொலைநகல் மூலம் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியப்படுத்தி கேட்டறிதல் மிகப் பயனுள்ளதாக அமையும்.

12. பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையில் தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சையின் பொருட்டு தோற்றுதல் வேண்டும் என்பதுடன், பரீட்சையின் பொருட்டு தோற்றும் முதற் சந்தர்ப்பத்திலேயே பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது. பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதி அட்டையொன்றை வழங்கப்படுவது, அவர் பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு தகைமையுடையவர் என ஏற்றுக்கொண்டதாகக் கருதுதலாகாது.

13. பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையை அல்லது குடியகல்வு குடிவரவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படும்.

14. பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட வேண்டி ஏற்படும்.

15. இவ்வறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமான அறிவித்தல்களிடையே, ஏதாவது முரண்பாடுகள் நிலவும் எனில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலில் உள்ள விடயங்கள் ஏற்புடையதாகும். மேலும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதாவதொரு விடயங்கள் இருப்பின், அது தொடர்பான தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு உரித்தானதாகும்.

எம். ஏ. எஸ். வீரசிங்ஹ,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
த. பெ. இல. 537,
கொழும்பு 07,
22, சனவரி 2014.

(அலுவலகப் பாவனையின் பொருட்டு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

*கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல சேவைகள் நிலைய எழுதுனர்கள் சேவையில் III ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)*

***Open Competitive Examination for Recruitment to Grade III of Agrarian Services Centre Clerk in the Department of Agrarian Development - 2013 (2014)***

* எழுத்துப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

* பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகர எண்கள் (வர்த்தமானி அறிவித்தலின் இணைப்பு 1 இற்கமைய) :

| எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்தை இறுதியில் குறிப்பிட்டு ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : SUNIL, A.B.)
(ii) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(ii) அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

4. பால் : ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

5. (i) பிறந்த திகதி :
ஆண்டு மாதம் திகதி
(ii) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

விவாகமாகாதவர் -1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

7. தொலைபேசி இலக்கம் :

8. க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சை சித்தியெய்திய வருடமும் மாதமும் :----.
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |

9. க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சை சித்தியெய்திய வருடமும் மாதமும் :----.
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |

10. கமநல சேவைகள் நிலையத்தின் மூலம் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம், திகதி மற்றும் கமநல சேவைகள் நிலையத்தின் பெயர் : ----.

பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும்.

11. **விண்ணப்பதாரரின் கூற்று**.- மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன். மேலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல்கள் தவறானதும் உண்மையற்றதும் எனத் தெரியவருமாயின், அத்தெரிவு நியமனத்திற்கு முன்னர் தெரியவருமாயின், நான் தகுதியற்றவன் எனவும், நியமனத்தின் பின்னர் தெரியவருமாயின் எவ்விதமான நஷ்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால், பரீட்சை நடாத்தப் படுவது தொடர்பாக விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் அமைந்தொழுகுவதாகவும் குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளதாகவும் உறுதியுரைக் கின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-** இங்கு கையொப்பம் இடப்பட்டுள்ள ...................................................... என்னும் முகவரியில் வதியும் திரு./திருமதி/செல்வி ...................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும் அவரது கையொப்பத்தை .......................................... ஆந் திகதி என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின்,
பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களின் பொருட்டு மட்டும்*

13. நிறுவன தலைவரின் சான்றிதழ்.- விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ................................................................ என்பவர் தற்போது இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் .......................................................... ஆக நிரந்தர/தற்காலிக/ அமைய உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் எனவும், அவர் இப்பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப் படுவாராயின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அறியத்தருகிறேன்.

...................................,
நிறுவனத் தலைவரின்
கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**இணைப்பு இலக்கம் - 01**

**பரீட்சை நிலையம் அமையவேண்டிய நகர இலக்கத்தினை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தெரிவுசெய்யவும்.**

**அட்டவணை 1**

| மாகாணம் | நகரம் | நகர எண் |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| மத்திய மாகாணம் | கண்டி | 04 |
| | மாத்தளை | 05 |
| | நுவரஎலியா | 06 |
| தென் மாகாணம் | காலி | 07 |
| | மாத்தறை | 08 |
| | அம்பாந்தோட்டை | 09 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 10 |
| | மன்னார் | 11 |
| | வவுனியா | 12 |
| | முல்லைத்தீவு | 13 |
| | கிளிநொச்சி | 14 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 15 |
| | அம்பாறை | 16 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் மாகாணம் | குருநாகலை | 18 |
| | புத்தளம் | 19 |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | 20 |
| | பொலொன்னறுவை | 21 |
| ஊவா மாகாணம் | பதுளை | 22 |
| | மொனறாகலை | 23 |
| சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 24 |
| | கேகாலை | 25 |

2-179

---

திருத்தம்

**2014, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் சீராக்கம் செய்தல்**

**கல்வி அமைச்சு**

ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சி நெறியொன்றைப் பயிலுவதற்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி - 2014

4.25 **பாடநெறி இலக்கம் 25** - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஆங்கிலம்) :

**கவனிக்க வேண்டியது.-**

(i) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறிக்கு தெரிவுசெய்யும்போது அந்தந்த மாவட்டத்தில் 4.25.1 இன்படி தகைமைபெறும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இவர்கள் 6.1.2 பிரிவின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.) இவர்கள் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை. நேர்முகப் பரீட்சையின்போது தகைமைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். 4.25.2 இன்படியான விண்ணப்பதாரிகள் இப்பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கும் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளல் - 2014**

9.4 உடற்கல்வி சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் 12.0 பிரிவுக்காக உள்ளடக்கப்படும் புள்ளிகளின் மொத்தம் ☐

14.0 வர்த்தமானி அறிவித்தலின் 4.8 வாசகத்திற்கமைய கத்தோலிக்க/கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரர்களினால் உரிய பகுதி பூரணப்படுத்தப்பட வேண்டும்.

| பாடநெறியின்/தராதரப் பத்திரத்தின் பெயர் | கால அளவு | | தரம் |
|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | |
| 14.1 தேவதர்ம சாஸ்திரம் (BTH)<br>14.2 தேசிய குருத்துவக் கல்லூரியின் கிறிஸ்தவ மெய்யியல் பாடநெறிச் சான்றிதழ்<br>14.3 தேசிய குருத்துவக் கல்லூரியினால் நடாத்தப்படும் கத்தோலிக்க சமய ஆசிரிய சான்றிதழ் ஆசிரிய தராதரப் பத்திரம் (கத்தோலிக்கம்)<br>14.4 இறையியல் கல்லூரி நடாத்தும் கத்தோலிக்க சமயம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ்<br>14.5 துறவிகளுக்கான மறைக்கல்வி பயிற்சி பாடநெறி (Novitiate) வெற்றிகரமாக பூர்த்தி செய்தமைக்கான துறவி விடுதியின் பொறுப்பாளர்/ஆசிரியரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்<br>14.6 தேசிய கிறிஸ்தவ சபையினால் சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல்<br>14.7 பிலிமத்தலாவை சாஸ்திர நிலையத்தினால் நடாத்தப்படும் டிப்ளோமா தராதரப் பத்திரம்<br>14.8 கத்தோலிக்க/கிறிஸ்தவ ஆசிரியராக எடுக்க பொருத்தமானவர் என கத்தோலிக்கர்களுக்கான ஆயர் பதவி சான்றிதழ்/கிறிஸ்தவர்களுக்கான தேசிய கிறிஸ்தவ சபையின் சான்றிதழ்<br>14.9 க. பொ. த. (உ.த.) கிறிஸ்தவ திருமறை/கிறிஸ்தவம்/கிறிஸ்தவ நாகரீகம் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் | | | |

மேற்படியான மாற்றங்களை உட்படுத்துவதுடன் 2014.02.21 எனும் விண்ணப்ப முடிவு திகதியை 2014.02.28 என மாற்றுமாறு வேண்டுகின்றேன்.

அநுர திசாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை,
2014.01.31.

2-450

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்ரீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2014**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 07.02.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.01.2014 |
| | | வியாழன் | 13.02.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.01.2014 |
| | | வெள்ளி | 21.02.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.02.2014 |
| | | வெள்ளி | 28.02.2014 | .. | நண்பகல் 12 | வியாழன் | 13.02.2014 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 07.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.02.2014 |
| | | வெள்ளி | 14.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.02.2014 |
| | | வெள்ளி | 21.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.03.2014 |
| | | வெள்ளி | 28.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.03.2014 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 04.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.03.2014 |
| | | வெள்ளி | 11.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.03.2014 |
| | | வியாழன் | 17.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.04.2014 |
| | | வெள்ளி | 25.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.04.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

B3 - B80809